**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, NAGAPATTINAM**
**SESSIONS CASE No. 72/2022**

**Deposition of witness for prosecution : PW - 8 (LW- 12)**

| **Name** | **ராஜா** | **Father's Name** | **ராமலிங்கம்** |
|---|---|---|---|
| **Village** | | **Taluk** | |
| **Calling** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on 23.03.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது கீழையூரில் வசித்து லாட்ஜில் மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 12.02.2019ம் வருடம் மாரிமுத்து என்பவர் அருள்செல்வா லாட்ஜின் 3வது மாடியிலிருந்து கீழே இருந்த என்னை மேலே கூப்பிட்டார். அப்போது 19ம் நம்பர் ரூமில் ஆஜர் எதிரி எனது மாமாவிற்கு லோ பிரசர் என்றும், இறந்து போன நபர் பாத்ரூம் வாசலில் கீழே படுத்திருந்தவரை நான் , ஐயப்பன், செல்லையன், சிலம்பரசன் ஆகியோர் வேளாங்கண்ணி சர்ச் மருத்துவமனைக்கு ஆட்டோவில் கொண்டு போய் சேர்த்தோம். அதன் பின்னர் நான் அங்கிருந்து வந்து விட்டேன். பின்னர் என்னிடம் மாரிமுத்து வந்து மருத்துவமனையில் சேர்ந்த நபர் இறந்து விட்டதாக என்னிடம் சொன்னார். இது சம்மந்தமாக என்னிடம் காவல் துறையினர் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை**

மாரிமுத்து அருள்செல்வா லாட்ஜின் 3வது மாடியிலிருந்து கீழே இருந்த என்னை மேலே கூப்பிட்டார் என்றும், நான், ஐயப்பன்,செல்லையன், சிலம்பரசன் ஆகியோர் வேளாங்கண்ணி சர்ச் மருத்துவமனைக்கு ஆட்டோவில் கொண்டு போய் சேர்த்தோம் என்ற

விவரங்களை போலீசார் என்னை விசாரித்த போது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் லாட்ஜில் வேலை செய்வதற்கான வருகை பதிவேடு உள்ளது என்றால் சரிதான். எனது வருகைபதிவேட்டை போலீசார் விசாரணை செய்தபோது எங்கள் லாட்ஜில் இருந்து கைப்பற்றிக்கொண்டார்களா என்றால் இல்லை. நான் லாட்ஜில் வேலை செய்யவில்லை என்றும், அந்த விவரம் போலீசாருக்கு தெரிய வந்து விடும் என்பதால் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் ஆஜர் எதிரி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த இடத்தில் நான் இருந்ததாகவும், அங்கு பார்த்ததாகவும், அங்கு இருந்த நபரை மருத்துவமனையில் சேர்த்ததாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவம் சமயம் அங்கு இருந்ததாக கூறப்படும் விவரம் மாரிமுத்துவிற்கு தெரியுமா என்றால் தெரியும். சிசிடிவி கேமராக்கள் நான் பணிபுரியும் லாட்ஜ் மற்றும் அருள்செல்வம் லாட்ஜில் உள்ளது என்றால் சரிதான். நான் உதயம் லாட்ஜில் 12.02.2019 முதல் 8 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். போலீசார் என்னை 2019ம் வருடம் சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் என்னை விசாரித்தார்கள். விவரங்கள் எதுவும் நேரடியாக தெரியாமல் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரியை சம்மந்தப்படுத்தி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.